# <u>ADM COURT, SANKARANKOVIL</u>

**தேதி 15.04.2025**

**அசல் வழக்கு எண்.224/2017**

**<u>வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தபசில் சொத்து மாடசாமி என்ற கருப்பசாமி கங்கானி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்கூறிய மாடசாமி என்ற கருப்பசாமி என்பவருக்கு இரண்டு மனைவி என்றால் சரிதான். முதல்மனைவி பெயர் முத்தம்மாள், இரண்டாவது மனைவி பெயர் நல்லம்மாள். முதல்மனைவியின் மகன்தான் 1ம் வாதி வர்கீஸ் என்றால் சரிதான். பிரதிவாதி மன்மதராஜ் மாடசாமிக்கும் அவரது இரண்டாவது மனைவிக்கும் பிறந்தவர் என்றால் சரிதான். மேற்கூறிய மாடசாமிக்கும் அவரது இரண்டாவது மனைவிக்கும் பிரதிவாதியை தவிர்த்து சீதாலட்சுமி, ராஜலட்சுமி என்ற மக்கள் உண்டுஎன்றால் சரிதான். தபசில் சொத்தை தவிர்த்து இறந்துபோன மாடசாமிக்கு வேறு சொத்துக்கள் தாவா சொத்து அமைந்துள்ள கிராமத்தில் உண்டு என்றால் சரிதான்.

2. வாதிகள் எனக்கு உறவினர்கள். வாதிகளின் சிறப்பு அதிகார முகவர் என்ற நிலையில் நான் இவ்வழக்கை நடத்துகிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கு நிலுவையில் இருந்தபோது 1ம் வாதி வர்கீஸ் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 1ம் வாதி நிரந்தரமாக சென்னையில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். 1ம் வாதியின் ஈமச்சடங்குகள் சென்னையில் நடைபெற்றது என்றால் சரிதான். 1ம் வாதி கடைசியாக தாவா சொத்துக்கு எப்போது வந்தார் என்றால் 2017ம் வருடம் வந்தார். 2 முதல் 4 வாதிகள் எங்கு உள்ளனர் என்றால் 3ம் வாதி சென்னையிலும், 2மற்றும் 4 ம் வாதிகள் வெளிநாட்டிலும் இருந்து வருகின்றனர். 2 முதல் 4 வாதிகள் எப்போது இறுதியாக தாவா சொத்து அமைந்துள்ள கிராமத்திற்கு வந்தனர் என்றால் 2ம் வாதி மாடசாமி இறப்பிற்கு அவரது கிராமத்திற்கு வந்துள்ளார். 3ம் வாதி மற்றும் 4ம் வாதி முறையே 2018 மற்றும் 2019ம் வருடம் இறுதியாக தாவா சொத்து அமைந்துள்ள கிராமத்திற்கு

வந்தனர். தபசில் சொத்துடன் சேர்த்து கூடுதல் விஸ்தீரணம் கொண்ட சொத்து 10 செண்ட் என்றால் சரிதான். மேற்படி சொத்து இன்றளவிலும் இறந்துபோன மாடசாமி என்ற கருப்பசாமி என்பவரின் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். மேற்கூறிய மொத்த சொத்தில் 2 வீடுகள் உள்ளன என்றால்சரிதான். அதற்குரிய தீர்வைகளும் இறந்துபோன மாடசாமி பெயரில்தான் கட்டடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கூறிய 10 செண்ட் இடம் குறித்து 1ம் வாதியும், பிரதிவாதியும் 2013ம் ஆண்டு பனவடலிசத்திரம் காவல்நிலையத்தில் பாகம் பிரித்துக்கொண்டனர். மேற்படி பாகப்பிரிவினைக்கு மத்தியஸ்தர்கள் யாரேனும் உண்டா என்றால் நான் மட்டுமே இருந்தேன். மேற்படி பாகபிரிவினை குறித்து ஏதேனும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் உண்டா என்றால் எந்த ஆவணங்களும் இல்லை.

3. இவ்வழக்கை நான் வா.சா.ஆ.1 ன் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன். 2 முதல் 4 வாதிகள் எனக்கு அதிகார ஆவணம் ஏதேனும் பிறப்பித்துக்கொடுத்தார்களா என்றால் சென்னையில் வைத்து பிறப்பித்துக் கொடுத்தார்கள். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எந்த தேதியில் மேற்படி அதிகார ஆவணத்தை 2 முதல் 4 வாதிகள் பிறப்பித்துக்கொடுத்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. 2 முதல் 4 வாதிகள் அளித்த அதிகார ஆவணம் ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணம். அந்த ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். 1 ம் வாதி பிறப்பித்துக்கொடுத்த அதிகார ஆவணமான வா.சா.ஆ.1 அவரது இறப்பிற்கு பின்பு செயலற்றுவிட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு செயலற்ற ஆவணத்தின் அடிப்படையில் நான் வழக்கை நடத்தஇயலாது என்றால் சரியல்ல. 2 முதல் 4 வாதிகள் எனக்கு எந்த அதிகார ஆவணமும் பிறப்பித்துகொடுக்கவில்லை என்றாலும், அவ்வாறு கொடுக்கப்பட்டிருந்தால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. தபசில் சொத்தில் எனக்கு தனிப்பட்ட

உரிமை இல்லை என்றால் சரிதான். 1ம் வாதிக்கு சென்னையில் சொந்த வீடு உள்ளது என்றால் சரிதான்.

4. 1ம் வாதி மற்றும் பிரதிவாதி கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரிதான். கூட்டுக்குடும்ப வருமானத்தை கொண்டு 1ம் வாதிக்கு சென்னையில் வீடு வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. தபசில் சொத்து, தாவா சொத்து அமைந்துள்ள கிராமத்தில் உள்ள மற்ற சொத்துக்கள் மற்றும் மற்றும் 1ம் வாதியின் சென்னையில் உள்ள வீடு குறித்து 1ம் வாதி, பிரதிவாதி மற்றும் அவர்களது தந்தை ஆகியோர் 1994ம் ஆண்டு பாகபிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினையில் சென்னையில் உள்ள வீடு 1ம் வாதிக்கும், தபசில் சொத்து பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் 1ம் வாதி 23.11.1994 அன்று ஒரு ஆவணம் அவரது தந்தைக்கு பிறப்பித்துக்கொடுததுள்ளார் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் தபசில் சொத்து மற்றும் தாவா சொத்து அமைந்துள்ள கிராமத்தில் உள்ள மற்ற சொத்துக்களின் தனித்த சுவாதீனத்தை பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்கூறிய சொத்துக்களை அடையவேண்டும் என்ற நோக்கத்தில் மோசடியான அதிகார ஆவணத்தை பிறப்பித்து இவ்வழக்கை நானும், 1ம் வாதியும் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தபசில் சொத்தில் வாதிகளுக்கு உரிமை இல்லை என்று பிரதிவாதி குறிப்பிட்டு மறுத்துள்ளநிலையில் விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர ஏவுகட்டளை பரிகாரம் மட்டும் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைநிறுத்தத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தபசில் சொத்து எந்த காலத்திலும் வாதிகளின் அனுபவத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. 2முதல் 4 வாதிகளிடம் அதிகார ஆவணம் பெறாததால் எனது வாக்குமூலம் ஏற்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் தபசில் சொத்தின் சுவாதீனம் என்னிடத்தில் உள்ளது என்று சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு

மட்டுமே பிறப்பித்துக் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து பாகபிரிவினை செய்யப்பட்டது என்று பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கை வாதிகளின் சார்பில் நடத்துவதற்கு எனக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றாலும், இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**